## நூல் குறித்து வாசகர்கள் எழுதிய கடிதம் சில...

தங்களது "ஆளுமை வளர்ச்சி" நூலை வாங்கிப் படித்து அதனால் எனது ஆளுமைத்திறனை உயர்த்திக்கொண்டு சக மற்றும் உயர் அலுவலர்களின் பாராட்டுகளை பெற்றுள்ள நிலையில் ஆசிரியருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாக மேலாண்மையில் உளவியல், பொது நிர்வாகம், மக்கள் தொடர்பு, மொழிப்புலமை ஆகியவற்றில் எவ்வித பட்டங்களும் உயர்படிப்பும் இல்லாமல் பணி முதிர்வில் பதவி உயர்வு பெற்றுள்ள வருவாய்த் துறையை சார்ந்த என்னைப் போன்றோருக்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. 1) பழகுதிறன், 2) தொடர்புத்திறன், 3) உருவாக்கும்திறன், 4) முடிவெடுக்கும் திறன், 5) முனைப்புத்திறன், 6) மாற்றங்களுக்கு நம்மை உட்படுத்திக்கொண்டு வளர்ச்சிக்கு துணை நிற்றல், 7) தலைமைத்திறன் போன்றவற்றில் தனித்தகுதியை இந்நூல் எனக்கு வளர்த்து தந்துள்ளது. தலைப்புவாரியாகவும், நல்ல தமிழில் தன்னம்பிக்கை தரும் வகையிலான பல முன்னுதாரணங்களுடன் வரையப்பட்டுள்ள இப்புத்தகம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. சக அலுவலர்களையும் இந்நூலை வாங்கி படிக்குமாறு நான் வற்புறுத்தி வருகிறேன். ஆசிரியருக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

-அ.தனபால்
துணை ஆட்சியர் (Dy. Collector), தருமபுரி

நிறுவனங்களில் மனித வளத்தை சிறப்புற மேலாண்மை செய்வதற்கும், தனி மனிதர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறத் தேவையான ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் சிறந்த பயிற்சிக் கையேடாக உள்ளது, திரு.காரைமைந்தன் எழுதிய இந்த நூல். வெறுமனே ஆளுமைத் திறனுக்குத் தொடர்பான கோட்பாடுகளையும் உறவியல் தத்துவங்களையும் விளக்காமல் பயிற்சிகள் மூலம் திறமைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் எளிய நடையில் சிறந்த தமிழ் செறிவில் வெளி வந்திருப்பது இந்நூலின் சிறப்பு. நிறுவனங்களில்